

2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்று அறிக்கை

கடற்றொழில் அமைச்சு

மாளிகாவத்தை,

கொழும்பு – 10

செலவினத் தலைப்பு : 151

உள்ளடக்கம்	பக்க இல.
01. நிறுவன விபரம்	
1.1. அறிமுகம்	03
1.2. நிறுவனத்தின் கண்ணோட்டம், நடவடிக்கை, நோக்கம்	04
1.3. பிரதான செயற்பாடுகள்	04
1.4. நிறுவன கட்டமைப்பு	05
1.5. அமைச்சின் கீழுள்ள திணைக்களம்.். நிறுவனங்கள்	06
1.6. அமைச்சின் கீழுள்ள நிறுவன நிதியம்	07
1.7. வெளிநாட்டு உதவி பெறும் செயற்றிட்டங்களின் தகவல்கள்	08
02. முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்	09 - 10
03. 2022 திசம்பர் 31இன் இறுதி வருடத்துக்கான அனைத்து நிதி பற்றிய செயலாற்றுகை	
3.1. நிதி செயலாற்று கூற்று	11 - 12
3.2. நிதி நிலை பற்றிய கூற்று	13
3.3. நிதி பாய்ச்சல் பற்றிய கூற்று	14
3.4. நிதிக் கூற்று குறிப்பு	15
3.5. வருமான சேகரிப்புக்கான செயலாற்றுகை	16
3.6. ஒதுக்கிடப்பட்ட நிதியைப் பயன்படுத்தி மேற்கொண்ட செயலாற்றுகை	16
3.7. நி.பி. 208 கூற்று, பிற அமைச்சு.். திணைக்களங்களின் முகவராக இந்த திணைக்களத்துக்கு.். மாவட்ட செயலகத்துக்கு.். மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட ஏற்பாடுகள்	16 - 17
3.8. நிதி அல்லாத சொத்து அறிக்கை செயலாற்றுகை	17
3.9. கணக்காய்வாளரின் அறிக்கை	18
04. செயலாற்றுகையின் குறிகாட்டி	
4.1. நிறுவனங்களின் செயலாற்றுகையின் குறிகாட்டி (செயற்றிட்டத்தின் அடிப்படையில்)	19
05. உறுதியான அபிவிருத்தியின் நோக்கம் (ளுனுபு) நிறைவேற்றிய செயலாற்றுகை	
5.1. அடையாளம் காணப்பட்ட உறுதியான அபிவிருத்தியின் நோக்கம்	20
5.2. உறுதியான அபிவிருத்தியின் இலக்கை நிறைவேற்றிய சாதனை மற்றும் சவால்களின் சுருக்கம்	21 - 23
06. மனித வள சுயவிபரம்	
6.1. ஊழியர் புள்ளிவிபர முகாமைத்துவம்	24
6.2. நிறுவனத்தின் செயற்றினுக்கான மனித வளக் குறைவு அல்லது மேலதிக பாதிப்புக்கான விடயம்	24
6.3 மனித வள அபிவிருத்தி	24
07. இணக்க அறிக்கை	25 - 30

01 நிறுவனத்தின் சுயவிபரம்

1.1 அறிமுகம்

இலங்கையின் அந்நிய பொருளாதார வலயத்துக்குரிய 517,000 சதுர கிலோ மீற்றர் கடற் பிரதேசமாகும். சர்வதேச கடல், கடனீரேரி, நீரேரி மற்றும் உள்ளக நீர்நிலைகளை பொறுப்புடன் பயன்படுத்துவதன் மூலம் தேசிய பொருளாதாரத்துக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கும் கடற்றொழில் கைத்தொழிலை உருவாக்க கடற்றொழில் அமைச்சு நடவடிக்கை எடுத்து வருவதுடன், இந்த அமைச்சின் விடயத் தலைப்பின் கீழ் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம், தேசிய நீரியல் வளங்கள் ஆய்வு மற்றும் அபிவிருத்தி முகவர் நிறுவனம், தேசிய நீர்வாழின செய்கை அபிவிருத்தி அதிகார சபை, இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம், இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம், மட்டுப்படுத்தப்பட்ட சீ – நோர் நிறுவகம், நொன்சி லிமிட்டட் நிறுவனம் ஆகிய நிறுவனங்கள் செயற்பட்டு வருகின்றன.

அரசின் கொள்கைகளுக்கு மற்றும் குறித்த கட்டளைகளுக்கு அமைவாக தன்னிறைவு பெற்ற கடற்றொழில் பொருளாதாரத்தை நிலை நிறுத்துவதற்கான கடற்றொழில் வழங்களை நிலைபேறாக பயன்படுத்துவதற்கான கொள்கை, வழிமுறை மற்றும் திட்டங்களைத் தயாரிப்பது கடற்றொழில் அமைச்சின் பிரதான பொறுப்புகளாகும். இதற்கு மேலதிகமாக அரசின் செயற்படுத்தப்படும் தேசிய கொள்கையின் அடிப்படையில் அமைத்து கடற்றொழில் விடயத்துக்கு மற்றும் அமைச்சின் கீழ் உள்ள திணைக்களம் மற்றும் சட்டபூர்வமான நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் விடயத்துக்குரிய கொள்கைகள், வேலைத் திட்டங்கள் மற்றும் செயற்றிட்டங்களைத் தயாரித்தல், நடைமுறைப்படுத்தல், பின்விபரம் பெறல், மதிப்பிடலுக்கான கீழ்குறிப்பிடப்படும் விடயங்களில் கடற்றொழில் அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களின் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

- அமைச்சின் விடயத் தலைப்பின் கீழ் வரும் பொதுச் சேவைகளை திறமையாக மற்றும் நட்பு முறையில் வழங்குதல்.
- வீண்விரயம், ஊழலைத் தவிர்க்கும் அதே வேளையில் அமைச்சின் பொறுப்புகளை நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு, நவீன முகாமைத்துவ முறை மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அனைத்து நடைமுறைகளையும் மறுசீரமைத்தல்.
- கடற்றொழில் பிரிவில் ஆராய்ச்சி நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதன் மூலம் உயிருள்ள மற்றும் உயிரற்ற தேசிய நீரியல் வளங்களை அபிவிருத்தி செய்தல், நவீன அறிவியல் முறைகளைப் பயன்படுத்தி சமுத்திர வளங்கள் சார்ந்த பொருளாதார அபிவிருத்திக்கான செயற்றிட்டங்களை விரிவுபடுத்த வசதிகளை வழங்கல்.
- அரசுக்குச் சொந்தமான கடற்றொழில் படகுகளின் முகாமைத்துவம், செயற்பாடு, நுகர்வுக்கு மற்றும் உற்பத்திக்கு நியாயமானவாறு மீன் உற்பத்தி விற்பனை நடவடிக்கைகளை விரிவுபடுத்தல்.
- சர்வதேச கடற் பிரதேசத்தில் மீன்பிடிக்கும் நடவடிக்கையை விரிவுபடுத்துவதற்கு தேசிய கம்பனிகளுக்கு சந்தர்ப்பம் வழங்கல்.
- இலங்கைக்கு உரித்தான கடற் பிரதேசத்தில் அத்துமீறி மீன்பிடிப்பதை நிறுத்துதல்.
- தேசிய ரின் மீன் கைத்தொழிலை மேம்படுத்தவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- கடற்றொழில் சார்ந்த வர்த்தகத்தை மேம்படுத்தவதற்கு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தகத்தை ஊக்குவித்தல்.
- ஏற்றுமதி சந்தையை இலக்காகக் கொண்டு அலங்கார மீன் கைத்தொழிலை விரிவுபடுத்தல், மீனவ மக்களின் நலன்புரி நடவடிக்கைகளை விரிவுபடுத்தல் மற்றும் பயனுள்ள வங்கி மற்றும் காப்பீட்டு முறைகளை அறிமுகப்படுத்தல்.
- சமுத்திர பல்கலைக்கழகம் மற்றும் தொடர்புடைய கடற்றொழில் நடவடிக்கை சம்பந்தமாக தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவ பயிற்சி வேலைத் திட்டங்களை செயற்படுத்தல், சமுத்திர உவர்நீர் (கடனீரேரி) மற்றும் நன்னீர் மீன் கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம்.
- பல்தின கடற்றொழில் படகுகளுக்கு கடல் நீரைப் பயன்டுத்தி குளிரூட்டல் தொகுதியை அபிவிருத்தி செய்தல்.
- சூரிய சக்தியின் பயன்பாட்டை ஊக்குவித்தல், கடற்றொழில் துறைமுகங்கள் மற்றும் நங்கூரமிடும் தளங்களை அமைத்தல்.

1.2 நிறுவனத்தின் கண்ணோட்டம், நடவடிக்கை, நோக்கம்

நோக்கம்

கடற்றொழில் நீரியல் வளங்களின் பாதுகாப்பு மற்றும் உறுதியான பயன்பாடு சம்பந்தமாக தெற்கு ஆசிய வலயத்தில் முதன்மையான அற்புத நாடாக ஆக்குதல்.

நடவடிக்கை

நிகழ்கால மற்றும் எதிர்கால சந்ததியினரின் நலனுக்காக கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்களின் பயன்பாட்டை உறுதியான நிலையில் முகாமைத்துவம் செய்தல்.


கொள்கையின் நோக்கம்

- விஞ்ஞான அடிப்படையாகக் கொண்டு (science based) தகவல்களைப் பயன்படுத்தி வளங்களை உறுதியாக முகாமைத்துவம் செய்தல்.
- கடற்றொழில் கைத்தொழில் வலயம் மற்றும் சர்வதேச பிணைப்புகளுக்கு அமைதல்.
- சமுத்திர மீன் உற்பத்திகளை அதிகரிக்கச் செய்தல்.
- நீர்வாழ் உயிரினச் செய்கை மற்றும் நன்னீர் மீன் உற்பத்திகளை அதிகரிக்கச் செய்தல்.
- பின்அறுவடையின்போது ஏற்படும் வீண் விரயத்தைக் குறைத்தல் மற்றும் பெறுமதி சேர்ப்பை அதிகரிக்கச் செய்தல்.
- தனிநபர் மீன் நுகர்வை அதிகரிக்கச் செய்தல்.
- ஏற்றுமதி வருமானத்தை அதிகரிக்கச் செய்தல்.
- பொழுதுபோக்கு நடவடிக்கை, தொழில் மறறும் செயற்றிட்ட அபிவிருத்திக்கான சந்தர்ப்பத்தை மேம்படுத்தல்.
- மீனவ பிரசைகளின் சமூக பொருளாதார நடவடிக்கையை மேம்படுத்தல்

1.3 பிரதான செயற்பாடுகள்

- சமுத்திர, உவர் நீர் மற்றும் உள்ளக கடற்றொழில் கைத்தொழிலை அபிவிருத்தி செய்தல்.
- கொள்கை மற்றும் வேலைத் திட்டங்களை முறையாகத் தயாரித்தல்.
- தேசிய நீரியல் வளங்கள் அபிவிருத்தி மற்றும் நிலையாகப் பயன்படுத்தல்.
- நுகர்வோர்களை தேவையை திருப்திபடுத்துவதற்கு மீன் உற்பத்திகளை மலிவு விலைக்கு வழங்குதல்.
- உற்பத்திகளை சர்வதேச தரத்துக்கு உயர்த்தும் வகையில் வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- மீன் உற்பத்திகளை ஏற்றுமதிக்கு வசதிகளை வழங்கல்.

1.4. நிறுவன கட்டமைப்பு



1.5 அமைச்சின் கீழுள்ள திணைக்களம்/ நிறுவனங்கள்

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம் (DFAR)	**எதிர்பார்க்கும் நோக்கம்** -இலங்கையில் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்களின் முகாமைத்துவம், அபிவிருத்தி மற்றும் பேணல் **பொறுப்புகள்**– பிராந்திய, சர்வதேச பிரமாணம் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக 1996இன் 02ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டங்களை அறிமுகம் செய்தல், கடற்றொழில் முகாமைத்துவ நடவடிக்கை மற்றும் நியதி நிபந்தனைகளை முறையாக மேற்கொள்ளல்..
தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகாமை (NARA)	**எதிர்பார்க்கும் நோக்கம்**- நீரியல் வளங்கள் சம்பந்தமான ஆய்வு மேற்கொள்ளல் மற்றும் வளங்கள் அபிவிருத்தி,பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம். **பொறுப்புகள்** -1981ஆம் ஆண்டின் 54ஆம் இலக்க தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகாமை சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட இந்த நிறுவனத்தின் மூலம் சமுத்திர உயிரின வளங்கள், நன்னீர் நீரியல் வளங்கள் மற்றும் நீர்வாழ் உயிரினச் செய்கை, கடற்றொழில் தொழில்நுட்பம், பின் அறுவடையின் வீண் விரய தொழில் நுட்பம், சுற்றாடல் ஆய்வு, சமுத்திர உயிரின விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் விஞ்ஞானம் சம்பந்தமான பரிசேதனைகளை மேற்கொள்ளல்.
தேசிய நீர்வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகாரசபை (NAQDA)	**எதிர்பார்க்கும் நோக்கம்** - செய்கை அடிப்படையில் நன்னீர் மீன்பிடிக் கைத்தொழில் மற்றும் நீர்வாழ் உயிரினச் செய்கை முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு **பொறுப்புகள்** - 1998இன் 53ஆம் இலக்க இலங்கை தேசிய நீர்வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட இந்த நிறுவனம் நன்னீர் மீன்பிடிக் கைத்தொழில் மற்றும் நீர்வாழ் உயிரினச் செய்கைக்குத் தேவையான குடம்பிகள் வழங்கல், இறால் செய்கை நடவடிக்கையை கண்காணிப்பதற்கு நிலையங்கள் மற்றும் நீர்வாழ் உயிரினச் செய்கை பயிற்சிகளை வழங்கல்..
இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்(CFHC)	**எதிர்பார்க்கும் நோக்கம்** - மீன் உற்பத்தியாளர் மற்றும் நுகர்வோர்களுக்கு உச்ச ரீதியாக அனுகூலத்தை வழங்குவதன் மூலம் மீன் விற்பனை சந்தைக்குப் பங்களித்தல். **பொறுப்புகள்** - 1957ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரச வர்த்தக கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட இந்த நிறுவனத்தின் மூலம் மீன் கொள்முதல் மற்றும் விற்பனை, ஐஸ் உற்பத்தி, விற்பனை, குளிரூட்டல் வசதிகளை மேற்கொண்டு வருகிறது. அத்துடன் மீன் உற்பத்தி மற்றும் விற்பனை நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகிறது.
இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் (CFC)	**எதிர்பார்க்கும் நோக்கம்** - மீன் உற்பத்தியாளர் மற்றும் நுகர்வோர்களுக்கு உச்ச ரீதியாக அனுகூலத்தை வழங்குவதன் மூலம் மீன் விற்பனை சந்தைக்குப் பங்களித்தல். **பொறுப்புகள்** - 1957ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரச வர்த்தக கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட இந்த நிறுவனத்தின் மூலம் மீன் கொள்முதல் மற்றும் விற்பனை, ஐஸ் உற்பத்தி, விற்பனை, குளிரூட்டல் வசதிகளை மேற்கொண்டு வருகிறது. அத்துடன் மீன் உற்பத்தி மற்றும் விற்பனை நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகிறது.
சீ-நோர் நிறுவனம் (Cey-Nor)	**எதிர்பார்க்கும் நோக்கம்** - கடற்றொழில் மற்றும் அது சார்ந்த தொழிலுக்கான சகல உபகரணங்கள் வழங்கல் **பொறுப்புகள்** - 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள இந்த நிறுவனத்தின் மூலம் பயிபர் க்ளாஸ் படகுகள் உற்பத்தி மற்றும் விற்பனை மீன்பிடி வலைகள் உற்பத்தி மற்றும் விற்பனை அத்துடன் மீன்பிடி உபகரணங்களையும் வழங்கி வருகிறது.
நோத்சீ லிமிட்டட்	**எதிர்பார்க்கும் நோக்கம்** - தேசிய கடற்றொழிலாளர்களின் தேவைக் கேற்ப உயர் தரமுடைய மீன் வலைகள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் தயாரிக்கும் கம்பனியாகும். **பொறுப்புகள்**– 1982இன் 17ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டு, 2007இன் 7ஆம் இலக்க புதிய கம்பனிச் சட்டத்தின் கீழ மீள பதிவு செய்யப்பட்ட மீன்பிடி வலைகள் தயாரிக்கும் கம்பனியாகும்.

1.6 அமைச்சின் கீழுள்ள நிறுவன நிதியம்

நிறுவனம்	வேலைத்திட்டம்	ஒதுக்கப்பட்ட நிதி (ரூ.மி.)
கடற்றொழில் அமைச்சு (MF)	கடனீரேரி அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு	2,000.00
	கந்தர கடற்றொழில் துறைமுகத்தை அபிவிருத்தி செய்தல் மற்றும் வெல்லமங்கர கடற்றொழில் துறைமுகத்தை அபிவிருத்தி செய்தல்	
	பலபிட்டிய கடற்றொழில் துறைமுகம் நிர்மாணித்தல்.	
	கந்தர கடற்றொழில் துறைமுகம் நிர்மாணித்தல்.	
	நீர்கொழும்பு கடனீரேரி அபிவிருத்தி செயற்றிட்டம்	
	ரெக்காவ நங்கூரமிடும்தளம் நிர்மாணம்.	
	மாவெல்ல நங்கூரமிடும்தளம் நிர்மாணம்.	
	"ஒறுவெல்ல" செய்திப் பத்திரிகை மற்றும் "தியவர நவோதய" வானொலி வேலைத் திட்டம்	11.70
	வடமாகாண நிலைபேறான கடற்றொழில் அபிவிருத்தி செயற்றிட்டம்.	10.00
	கேடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் பிரிவின் அபிவிருத்தி நடவடிக்கை	1,000.00
	கடற்றொழில் பிரிவின் அப்படை வசதிகளின் அபிவிருத்தி	276.00
கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களம் (DFAR)	அபிவிருத்தி செயற்பாடு	26.00
இலங்கை தேசிய நீர்வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகார சபை (NAQDA)	அபிவிருத்தி செயற்பாடு	10.00
தேசிய நீரியல் வளங்கள் ஆய்வு மற்றும் அபிவிருத்தி முகவர் நிறுவனம் (NARA)	அபிவிருத்தி செயற்பாடு	10.00
		25.00
		2.66
இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம் (CFHC)	அபிவிருத்தி செயற்பாடு	50.00
	மொத்தம் (கடற்றொழில் அமைச்சு)	**3,421.36**

1.7 வெளிநாட்டு உதவி பெறும் செயற்றிட்டங்களின் தகவல்கள்

இல.	செயற்றிட்டத்தின் பெயர்	நிதி வழங்கும் நிறுவனம்	வுருஊ ரூபா மில்.	இல.
01.	கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களத்தில் பதிவு செய்துள்ள அனைத்து பல்தினப் படகுகளுக்கும் நிலம் சார்ந்த படகு கண்காணிப்பு மையம் மற்றும் செய்மதி அடிப்படையிலான 4,244 VMS ராண்ஸ்பொண்டர் அலகு வழங்கல் மற்றும் பொருத்துதல	அவுஸ்திரேலிய உதவி	1207.425	3 வருடங்கள்
02.	இலங்கை நீர்த் தேக்கங்களில் துடுப்பு மீன் மற்றும் பெரிய நன்னீர் இறால்களுக்கான கலாச்சார அடிப்படையிலான மீன் வளத்தின் மேம்படுத்தப்பட்ட உற்பத்தி திறன், செயற் திறன் மற்றும் நிலைபேறான ஆராய்ச்சி திட்டங்களை செயற்படுத்தல்.	சர்வதேச விவசாய ஆராய்ச்சிக் கான அவுஸ்திரேலிய மையம்		3 வருடங்கள்
03	பயனுள்ள உயிர் பாதுகாப்பு மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பம் மூலம் ஸ்மார்ட் மற்றும் நிலையான மீன்வளர்ப்	கடற்றொழில் விவசாய அமைபின் கீழ் கொரிய நிதி	424	5 வருடங்கள்
04	கடல் அட்டை செய்கை மற்றும் பதப்படுத்துதல், மறுசேமிப்பு மற்றும் அருகிவரும் மீன் வளங்களை நிர்வகித்தல் ஆகியவற்றில் தொழில்நுட்ப உதவி	உணவு மற்றும் விவசாய அமைப்பு	71.8	2 வருடங்கள்
05	மீன்பிடித் தொழிலில் அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளைக் குறைப்பதன் மூலம் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல்	உணவு மற்றும் விவசாய அமைப்பு	7.8	2 வருடங்கள்
06	நீடித்த வளர்ச்சிக்காக மீன்வளம் மற்றும் மீன்வளர்ப்பு வளங்களை பொறுப்புடன் பயன்படுத்துதல்	உணவு மற்றும் விவசாய அமைப்பு	2728.6	3 வருடங்கள்
07	இலங்கையைச் சுற்றியுள்ள கரையோர நீர் உப்புத்தன்மை கண்காணிப்பு	அவுஸ்திரேலிய நிதி உதவி	1.2	2 வருடங்கள்

பரிமாற்ற பெறுமதி 01.06.2022 ஆந் திகதிக்கு - 1 USD = Rs. 359

02 முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

அரசினால் 2022ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட மொத்த வரவு செலவு ஒதுக்கீடு ரூபா 3,521.9 மில்லியனாகும். இந்த வருடத்துக்குள் ஒதுக்கப்பட்ட மொத்த முதலீட்டுத் தொகையில் ரூபா 2,442.2 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

கோவிட் தொற்று ஏற்பட்டு பொருளாதார நெருக்கடி மற்றும் எரிபொருள் உயர்வு போன்றவை மீன்பிடித் தொழிலின் முன்னேற்றத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தினாலும், 2022ஆம் ஆண்டில் உவர்நீர் மீன்பிடித் தொழிலின் ஊடாக 280,610 மெ. தொன் மற்றும் நன்னீர் மீன்பிடித் தொழிலின் ஊடாக 116,620 மெ. தொன்னும் அறுவடை செய்ய முடிந்தது. இதற்கமைய இந்த காலப் பகுதியில் அனைத்து மீன் உற்பத்தி 397,230 மெ. தொன்னாகும்.

தேசிய பொருளாதாரம் மற்றும் வெளிநாட்டு கையிருப்பின் வளர்ச்சிக்கான மீன் ஏற்றுதியின் ஊடாக சிறப்பான பங்களிப்பை வழங்கி வருவதுடன் 2022ஆம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட மீன் உற்பத்திப் பொருட்களின் மொத்த அளவு 25,730 மெ. தொன்னாகும். அதன் பெறுமதி ரூபா 97,243 மில்லியனாகும். அது 2021ஆம் ஆண்டின் வருமானத்தைவிட அதிகமாகும். இது கடற்றொழில் துறையில் ஒரு தனித்துவமான சாதனையாகக் குறிப்பிடலாம். மேலும் இக்காலப் பகுதியில் அலங்கார மீன் ஏற்றுமதி மூலம் ரூபா 7,143 மில்லியன் ஈட்டப்பட்டுள்ளது. இதனை கடந்த வருடங்களுடன் ஒப்படுகையில் இது ஒரு சாதனையாகக் கருதப்படலாம்.

பொது மக்களின் ஊட்டச்சத்தை உயர் மட்டத்தில் பேணுவற்கு புரதத்தின் முக்கிய ஆதாரமாக மீன் நுகர்வு கருதப்படலாம். ஆத்டன் 2022ஆம் ஆண்டில் தனிநபர் மீன் நுகர்வு நாளொன்றுக்கு 31.3 கிராமாகும். தற்போது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளில் இருந்து எதிர்காலத்தில் இத்துறையில் விரைவான வளர்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது.

2022ஆம் ஆண்டில் எரிபொருள் பற்றாக்குறை, அதிகரித்துவரும் தொழிலாளர் செலவினம், முக்கியமாக ஐஸ் போன்ற உள்ளீடுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் விலையேற்றம், ஆழ் கடலில் மீன் அறுவடை கடுமையாகப் பாதித்துள்ளது. மொதத்தத்தில் நாடு பொருளாதார ரீதியில் இக்கட்டான கால கட்டத்தை எதிர்கொண்டுள்ள போதிலும் கடற்றொழில் அமைச்சினால் தனக்கு கீழுள்ள கடற்றொழில் திணைக்களம் மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து எடுத்த அனைத்து திட்டங்களும் மற்றும் வழிமுறைகளின் காரணமாக மீன் ஏற்றுமதியின் ஊடாக நாட்டுக்கு அதிகளவான அந்நிய செலாவணியை ஈட்ட முடிந்தது. அரசின் கொள்கை மற்றும் விதிமுறைகள் அமைவாக மீன்பிடித் துறையில் இலட்சியங்களை அடைவதற்கு ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி இலக்கு மற்றும் தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புகைச் சந்திக்கும் திட்டங்கள் மற்றும் செயற்றிட்டங்களையும் செயற்படுத்துவதற்கு கவனம் செலுத்தி வருகிறது.

எக்ஸ்பிரஸ் பேர்ள் எனும் சரக்கு கப்பல் 2021.05.20ஆந் திகதி அலங்கை கடற் பரப்பில் தீப்பிடித்ததுடன், பின்னர் அது முற்றாக தீப்பிடித்து கடலில் மூழ்கியது. இந்த சம்பவத்தால் மீனவர்களுக்கு, மீன்பிடிப் படகுகளுக்கு மற்றும் மீன்பிடி உபகரணங்களுக்கு ஏற்படக்கூடிய பெரும் பாதிப்பைத் தடுக்கும் பொருட்டு நீர்கொழும்பு முதல் பாணந்துறை வரையான கடற் பரப்பில் மீன்பிடி நடவடிக்கைக்கு 2021.05.21ஆந் திகதி முதல் தடை விதிக்கப்பட்டது. இந்த மீன்பிடித் தடை காரணமாக முதற் கட்டமாக நேரடியாக மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட 15,032 மீனவர்களும் மற்றும் மீன்பிடித் தொழல் சார்ந்த தொழிலில் ஈடுபட்டிருந்த 4,891 பேரும் தமது வாழ்வாதாரத்தை இழந்தனர். அத்துடன் மீன்பிடி தடை வலயத்தின் படிப்படையான திருத்தத்தின் பின் வாழ்வாதாரத்தை இழந்தவர்களின் எண்ணிக்கையும் குறைந்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. முதற் சந்தர்ப்பத்தில் 457 கிலோ மீற்றர் பரப்பளவில் அமுல்படுத்தப்பட்ட மீன்பிடி தடைக் காலத்தின் பின், 2022.06.05ஆந் திகதி முதல் கப்பல் விபத்துக்குள்ளான பகுதியிலிருந்து 2 கிலோ மீற்றர் சுற்றளவில் உள்ள பகுதியைத தவிர மீதமுள்ள பகுதிகள் யாவும் முற்றாக அகற்றப்பட்டன. இந்த மீன்பிடி தடை காரணமாக வாழ்வாதாரத்தை இழந்த மீனவர்களுக்கும், அது சார்ந்த தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் காப்புறுதி நிறுவனத்திலிருந்து நட்ட ஈடு பெற்றுக் கொள்வதற்கு அமைச்சு தலையிட்டு நடவடிக்கை எடுத்தது. இதற்கமைய இதுகால வரை ரூபா 1,686 மில்லியன் வரை இடைக்கால இழப்பீட்டுத் தொகையின் 3 சுற்றுகளின் கீழ் மீன்பிடித் துறைக்கு நட்டஈடு வழங்குவதற்கு காப்புறுதி நிறுவனத்திடமிருந்து கிடைத்தது. அத்துடன் இந்த தொகை 2022.12.31ஆந் திகதி மீனவ மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது. நானகாவது இடைக்கால இழப்பீடாக பெறப்பட்ட ரூபா 1,604 2023ஆம் ஆண்டு முதற் காலாண்டில் பகிர்ந்தளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வெல்லமங்கர கடற்றொழில் துறைமுகம் நிர்மாணிக்கும் செயற்றிட்டம் 2018.06.26ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன், அச்செயற்றிட்டத்தின் பெறுமதி ரூபா 2,489 மில்லியனாகும். கடற்றொழில் துறைமுகத்தில் பல்தின கடற்றொழில் நடவடிக்கைக்கு இரு அலைதடுப்பு (மொத்த நீளம் 710 மீற்றர் வரையாகும்.) எரிபொருள் பகிர்ந்தளிக்கும் வசதி கொண்ட நிலையம் (டீசல் மற்றும் மண்ணெண்னெய் இரண்டும்) மேடைக்கட்டு, நீர்தடுப்பு அணைக்கட்டு, துறைமுக தடாகத்தில் 7.6 ஹெக்டயர் மற்றும் ஏனைய கரையோர வசதிகள் அடங்கலாக சகல வசதிகளும் அடங்கலான இந்த கடற்றொழில் துறைமுக நிர்மாணிக்கும் செயற்றிட்டத்தின் வேலை 2022.03.15ஆந் திகதி நிறைவு செய்யப்பட்டு நடவடிக்கைக்காக கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கலமெட்டிய கடற்றொழில் துறைமுகம் நிர்மாணிக்கும் செயற்றிட்டம் 2014.07.15ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன், அச்செயற்றிட்டத்தின் பெறுமதி ரூபா 1,280.79 மல்லியனாகும். 2020ஆம் ஆண்டின்போது சகல வேலைகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளது. இந்த கடற்றொழில் துறைமுகத்தின் அலைத்தடுப்பு (சுமாரட மொத்த நீளம் 335 மீற்றராகும்) மேடைக்கட்டு, நீர்தடுப்பணை, ஏலவிற்பனை நிலையம் நிலையம், எரிபொருள் பகிர்ந்தளிக்கும் வசதி கொண்ட நிலையம் (டீசல் மற்றும் மண்ணெண்னெய் இரண்டும்) வலை திருத்தும் அறை 01 மற்றும் 02 ஆகிய வசதிகளும் அடங்கியதாக இந்த கடற்றொழில் துறைமுகத்தின் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

03 2022 திசம்பர் 31இல் முடிவுறும் வருடத்துக்கான அனைத்து நிதி பற்றிய செயலாற்றுகை

3.1 நிதி செயலாற்று கூற்று

2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

ஏசீஏ- எப்

பாதீட்டு 2022 (ரூபா)		குறிப்பு	உண்மை நிலை 2022 (ரூபா)	2021 (ரூபா)	
-	**வருமானப் பெறுகைகள்**		-	-	
-	வருமான வரி	**1**	-	-	ஏசீஏ-1
-	உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	**2**	-	-	
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	**3**	-	-	
-	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	**4**	-	-	
-	**மொத்த வருமானப் பெறுகைகள் (அ)**		-	-	
-	**வருமானமற்ற பெறுகைகள்**		-	-	
-	திறைசேரி பணிமுற்பணங்கள்		2,599,630,364	2,693,148,000	**ஏசீஏ-3**
-	வைப்புகள்		247,304,884	189,514,931	**ஏசீஏ-4**
-	முற்பணக் கணக்குகள்		10,158,024	9,102,093	**ஏசீஏ-5**
	ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள்		-	-	
-	**மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)**		**2,857,093,272**	2,891,765,024	
-	**மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)**		**5,714,186,543**	5,783,530,048	
	திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)		-	-	
	தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)		**5,714,186,543**	5,783,530,048	
-	**கழி : செலவினம் மீண்டுவரும் செலவினம்**		-	-	ஏசீஏ-2(ii)
145,010,000	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	**5**	139,715,711	112,138,631	
134,063,240	ஏனைய பொருட்கள் சேவைகள்	**6**	111,254,821	72,077,585	
2,640,397,760	மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	**7**	2,542,493,049	301,858,617	
-	வட்டிக் கொடுப்பனவுகள்	**8**	-	-	
200,000	ஏனைய மீண்டுவரும் செலவினம்	**9**	72,000	226,281	
2,919,671,000	**மொத்த மீண்டுவரும் செலவினம்(ஊ)**		**2,793,535,581**	486,301,114	

	மூலதனம் செலவினம்				
9,143,000	முலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும்	**10**	4,974,518	8,115,637	
90,000,000	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	**11**	48,326,875	46,523,499	
81,700,000	மூலதன மாற்றல்கள்	**12**	62,623,440	49,844,546	**ஏசீஏ-2(ii)**
-	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	**13**	-	-	
1,400,000	திறன் விருத்தி	**14**	877,650	507,065	
3,313,660,931	ஏனைய மூலதனச் செலவினங்கள்	**15**	2,316,822,886	2,566,812,790	
3,495,903,931	**மொத்த மூலதனம் செலவினம் (எ)**		**2,433,625,369**	2,671,803,537	
	வைப்புக் கொடுப்பனவுகள்		1,386,227	49,619,736	**ஏசீஏ-4**
	முற்பணக் கொடுப்பனவுகள்		11,763,453	7,036,504	**ஏசீஏ-5**
	ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்		-	-	
	மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)		83,149,680	56,656,240	
	மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)		5,310,310,630	3,214,760,891	
6,415,574,931	**டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)**		403,875,913	2,568,769,157	
	பணிமுற்பண இணக்க அறிக்கையின்படி மீதி		**(2,453,217,358)**	**(322,995,867)**	**ஏசீஏ-7**
	டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி				**ஏசீஏ-3**
			-	-	

குறிப்பு : 2022ஆம் ஆண்டுக்கு நிதி கூற்று முறையாக மேற்கொள்ளும்போது 405 செலவு தலைப்பின் கீழ் கடற்றொழில் இராஜாங்க அமைச்சும் இணைக்கப்பட்டுள்ளது.

3.2 நிதி நிலை பற்றிய கூற்று

ஏசீஏ -பீ

2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	உண்மை நிலை 2022 ரூபா	2021 ரூபா
நிதி சொத்துக்கள் அற்றது			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ-6	721,915,845	670,623,450
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5/5ஏ	23,491,650	21,886,221
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ-3	-	-
மொத்த சொத்துக்கள்		745,407,495	692,509,671
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள்		(463,010,526)	(178,880,786)
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		721,915,845	670,623,450
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீஏ-5பீ		
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ-4	486,502,176	200,767,007
தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி	ஏசீஏ-3	-	-
மொத்தப் பொறுப்புக்கள்		745,407,495	692,509,671

பக்க இலக்கம் 7 முதல் 41 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்/பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் 42 முதல் 50 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்	கணக்கீட்டு உத்தியோகத்தர்	பிரதான நிதி உத்தியோகத்தர்/பிரதான கணக்காளர் / கணக்காளர் பணிப்பாளர்(நிதி)/ஆணை
பெயர்:	பெயர்:	பெயர் :
பதவி :	பதவி :	
திகதி : 23.02.23	திகதி : 23.02.23	திகதி : 2023-02-23
ආර්.එම්.අයි. රත්නායක ලේකම් ධීවර අමාත්‍යාංශය 02 වන මහල, නව මහලේකම් කාර්යාලය, මාලිගාවත්ත, කොළඹ - 10.	ආර්.එම්.අයි. රත්නායක ලේකම් ධීවර අමාත්‍යාංශය 02 වන මහල, නව මහලේකම් කාර්යාලය, මාලිගාවත්ත, කොළඹ - 10.	H.P. Saman Dharmasiri Chief Accountant Ministry of Fisheries New Secretariat, Maligawatta. Colombo 10.

2

3.3 காசுப் பாய்ச்சல் கூற்று

2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான காசுப் பாய்ச்சல் கூற்று

ஏசீஏ- சீ

	உண்மை	
	2022 ரூபா	2021 ரூபா
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		-
மொத்த வரிப் பெறுகைகள்	-	-
கட்டணங்கள், தண்டப்பணம், தண்டனை மற்றும் உத்தரவுப் பத்திரங்கள்	-	-
இலாபம்	-	-
வருமானம் அல்லாத பெறுகைகள்	-	-
ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	42,901,238	76,337,798
கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	2,599,969,931	2,693,148,000
முற்பணங்களை அறவிடல்	9,860,005	7,633,379
வைப்புக்களின் பெறுகை	247,304,884	90,332,307
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)	**2,900,036,058**	**2,867,451,484**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு		
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடுக் கொடுப்பனவுகள்	250,907,312	184,432,748
மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்	4,649,049	32,633,617
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	451,516,453	8,292,134
திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம்	339,567	-
முற்பணக் கொடுப்பனவு	8,863,593	7,036,504
வைப்புக் கொடுப்பனவு	71,386,227	49,619,736
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)	**787,662,201**	**282,014,739**
தொழிற்பாடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	**2,112,373,857**	**2,585,436,745**
முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்		
வட்டி	-	-
பங்கு இலாபம்	-	-
உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பொளதீக சொத்துக்களின் விற்பனை	-	-
உப கடன்கள் மீதான அறவீடுகள்	-	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)		
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு	2,112,373,857	2,585,436,745
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)	**2,112,373,857**	**2,585,436,745**
முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்து தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-உ)	**(2,112,373,857)**	**(2,585,436,745)**
முதலீட்டுச செயற்பாடுகளிலிருநது தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-உ)	**-**	**-**
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
உள்ளூர்க் கடன்கள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள்	-	-
பெற்ற நன்கொடைகள்	-	-
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)	**-**	**-**
கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:		
உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
வெளிநாடடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)	**-**	**-**
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)	**-**	**-**
காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) +(ஒ)	**-**	**-**
ஜனவரி 01 ஆம் திகதியீலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி	**-**	**-**
டிசம்பர் 31ஆம் திகதியீலுள்ளவாறான இறுதிக் காசு மீதி	**-**	**-**

3.4. நிதிக் கூற்றுக் குறிப்பு

அறிக்கையிடலின் அடிப்படை

1) **அறிக்கையிடல் காலப்பகுதி**

இந் நிதிக் கூற்றுக்களுக்கான அறிக்கையிடல் காலப்பகுதி 2022 சனவரி 01 முதல் டிசம்பர் 31 வரையானதாகும்.

2) **அளவீட்டுக்கான அடிப்படை**

நிதிக்கூற்றுக்களானது, வரலாற்றுக் கிரய அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ள அதேவேளையில், ஒரு சில சொத்துக்களின் வரலாற்றுக் கிரயம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டில்லாத போது கணக்கு தயாரிப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

நிதிக் கூற்றுக்களிலுள்ள இலக்கங்கள் இலங்கை ரூபாவில் கிட்டிய ரூபாய்க்கு தயாரிக்கப்படல் வேண்டும்.

3) **வருமானத்தை அடையாளங்காணுதல்**

நாணயமாற்று மற்றும் நாணயமாற்று அல்லாத வருமானங்கள் அவை கிடைக்கக்கூடிய காலப்பகுதியை கவனத்திற்கொள்ளாது, காசு கிடைக்கக் கூடிய காலப்பகுதிக்குள் வருமானமாக அடையாளங் காணப்படுகின்றது.

4) **சொத்து, இயந்திர மற்றும் உபகரணம் ஆகியவற்றின் அங்கீகாரம் மற்றும் அளவீடு**

சொத்துக்கள் நம்பத்தகுந்த அடிப்படையில் அளவிடப்படுகின்றதா மற்றும் நிறுவனத்தின் சொத்துக்கள் எதிர்கால பொருளாதார நலன்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றதா என்பதற்கான நிகழ்தகவின் அடிப்படையிலேயே சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

கிரயமுறை பொருத்தமில்லாத சந்தர்ப்பத்திலேயே சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்கள் கிரயம் மற்றும் மறமதிப்பீட்டு முறையில் அளவீடு செய்யப்படுகின்றது.

5) **சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்களின் ஒதுக்கம்**

இந்த மீள்மதிப்பு ஒதுக்கீட்டுக் கணக்கானது சொத்து, இயந்திர மற்றும் உபகரண கணக்கின் தொடர்புபட்டதாகும்.

6) **காசு மற்றும் காசுக்கு சமமானவை**

காசு மற்றும் காசுக்கு சமமானவை 2022 டிசம்பர் 31 இல் உள்ள உள்நாட்டு நாணயத்தாள்கள் மற்றும் நாணயங்களை உள்ளடக்கியதாகும்.

* ஒரு குறிப்பிட்ட அறிக்கையிடல் நிறுவனத்திற்கு குறிப்பிட்ட பரிவர்த்தனைகள் இருக்கும் சந்தர்ப்பங்களில் பொருத்தமான தகவல்களை அரச கணக்குகள் திணைக்களத்தின் அனுமதியுடன் உள்ளடக்கலாம். அந்த குறிப்பிட்ட பரிவர்த்தனைகளுக்கு தேவையான வெளிப்படுத்தல் "அறிக்கையிடலின் அடிப்படை" என்பதற்குக் கீழ் சேர்க்கப்படலாம்.

* அறிக்கையிடல் நிறுவனத்திற்கு தொடர்புடைய கணக்கியல் கொள்கைகள் மட்டுமே "அறிக்கையிடலின் அடிப்படை" இன் கீழ் வெளிப்படுத் தப்படவேண்டும்.

3.5. வருமானம் சேகரிப்புக்கான செயலாற்றுகை

ரூபா 000

அரசிறை குறியீடு	வருமானத் தலைப்பின் விபரம்	வருமான மதிப்பீடு		வருமானத்தைத் திரட்டுதல்	
		மூல மதிப்பீடு	திருத்திய மதிப்பீடு	அளவு (ரூபா)	இறுதி வருமான மதிப்பீடு %ஆக
2002-01-01	அரச கட்டிடம் மற்றும் வீட்டுக் வாடகை	30	30	32	107%
2002-02-99	வட்டி - பிற	850	850	1,117	131%
2003-02-99	நிர்வாக கட்டணம் மற்றும் கொடுப்பனவு – பல்வேறு	20,000	20,000	35,304	176%
2004-01-00	விதவைகள் மற்றும் அனாதைகள் பங்களிப்பு	-	-	6,448	0%

3.6. ஒதுக்கப்பட்ட நிதி பயன்படுத்தப்பட்ட செயலாற்றுகை

ரூபா 000

ஒதுக்கீட்டின் வகை	ஒதுக்கப்பட்ட நிதி		தேறிய செலவினம்	பயன்படுத்தப்பட்ட ஏற்பாடு, இறுதி ஒதுக்கீடு % ஆக
	ஆரம்ப நிதி	இறுதி மதிப்பீடு		
மீண்டுவரும்	2,136,600	2,919,671	2,793,536	96%
மூலதனம்	3,493,200	3,495,904	2,433,625	67%

3.7 நி.பி. 208 கூற்று, பிற அமைச்சு/திணைக்களங்களின் முகவராக இந்த திணைக்களத்துக்கு/மாவட்ட செயலகத்துக்கு.மாகாண சபைகளுக்கு வழங்கிய ஏற்பாடுகள்

தொ இல	ஒதுக்கிடப்பட்ட அமைச்சு/ திணைக்களம்	ஒதுக்கீட்டின் நோக்கம்	ஒதுக்கீடு		பயன்படுத்தப் பட்ட ஒதுக்கீடு நிறைவு செய்யப்பட்ட ஒதுக்கீட்டின் அளவு% ஆக
			ஆரம்ப ஒதுக்கீடு	இறுதியான ஒதுக்கீடு	
01.	இலங்கை புகையிரத திணைக்களம்	பருவகால சீட்டு வழங்குவதற்கு	135	135	100%
02	செயலாளர், கடற்றொழில் அமைச்சு	வாவிகளில் மீன் குஞ்சுகள் வைப்பிடல்	490,000	214,373	44%
03.	பணிப்பாளர் நாயகம், கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம்.	இகந்தர கடற்றொழில் துறைமுக நிர்மாண செயற்றிட்டத்துக்கு அனுமதிப் பத்திரம் புதுப்பித்தல்.	175	175	100%
04.	பிரதேச செயலாளர், யாழ்ப்பாணம்	அப்படை வசதிகள் அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கையிலுள்ள பற்றுச் சீட்டுகளை நிரப்புவதற்கு	20,702	19,668	95%
05.	பணிப்பாளர் நாயகம், கடற்றொழில் நீரியல் வளங்கள் திணைக்களம்.	கருவாடு உற்பத்தி தொழிலில் ஈடுபடும் பெண்களுக்கு உபகரணங்கள் வழங்கல்	4,300	1,087	25%
06.	பணிப்பாளர் நாயகம், கடற்றொழில் நீரியல் வளங்கள் திணைக்களம்.	பிரதேச செயலாளர், கடனீரேரி எல்லைத் தூண் நடல், மற்றும் கடனீரேரி முகாமைத்துவ குழு நிறுவுதல் மற்றும்	56,500	20,845	37%

		கடற்றொழில் ஒத்துழைப்புக் குழுக் கூட்டம் நடாத்தல்			
07	பணிப்பாளர் நாயகம், கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம்.	கைவிரல் அடையாள இயந்திரம் மீண்டும் அமைப்பதற்கான கட்டணம் செலுத்தல்.	4	4	100%
08	பணிப்பாளர் நாயகம், கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம்.	ரெக்காவ நங்கூரமிடும் தளம் நிர்மாணிக்கும் செயற்றிடத்துக்கு அனுமதிப் பத்திரம் புதுப்பித்தல்.	50	50	100%
09	மாவட்ட செயலாளர், யாழ்ப்பாணம்.	எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீப்பிடித்மை காரணமாக வாழ்வாதாரத்தை இழந்த மீன்பிடி துறை சார்ந்த நபர்களுக்கு இழப்பீடு வழங்கல்.	53,598	52,887	99%
10	மாவட்ட செயலாளர், கொழும்பு	எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீப்பிடித்தமை காரணமாக வாழ்வாதாரத்தை இழந்த மீன்பிடி துறை சார்ந்த நபர்களுக்கு இழப்பீடு வழங்கல்.	258,586	256,283	99%
11	மாவட்ட செயலாளர், கம்பஹா	எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீப்பிடித்தமை காரணமாக வாழ்வாதாரத்தை இழந்த மீன்பிடி துறை சார்ந்த நபர்களுக்கு இழப்பீடு வழங்கல்.	762,628	761,040	100%

3.8 நிதி அல்லாத சொத்து அறிக்கை செயலாற்றுகை

ரூபா 000

சொத்துக்களின் குறியீடு	குறியீட்டின் விபரம்	31.12.2022 ஆந் திகதிக்கு பொருட்கள் ஆய்வு அறிக்கைக்கு அமைய மீதி	31.12.2022 ஆந் திகதிக்கு நிதி நிலை அறிக்கைக்கு அமைய மீதி	எதிர்காலத்தில் கணக்கிய லுக்கு காரணமான	முன்னேற்றம் % ஆக அறிக்கையிடல்
9151	கட்டிடம் மற்றும் தொகுதிகள்		197,535		
9152	இயந்திர உபகரணங்கள்		342,790		
9153	காணி		5,172		
9154	அருவச் சொத்துக்கள்		-		
9155	உயிரியல் சொத்துக்கள்		-		
9160	வேலை நடந்துவரும் சொத்துக்கள்		176,419		
9180	குத்தகை சொத்துக்கள்		-		

3.9.கணக்காய்வு அதிபதியின் அறிக்கை

04 செயலாற்று குறிகாட்டி

4.1. நிறுவனங்களின் செயலாற்றுக் குறிகாட்டி (செயற்றிட்டத்தின் அடிப்படையில்)

விசேட குறிகாட்டி	எதிர்பார்த்த வெளியீட்டின் (%) சதவீதமாக உண்மையான வெளியீடு			
	100% - 90%	75% - 89%	50% - 74%	
2022ஆம் ஆண்டில் அனைத்து மீன் உற்பத்தி 397,230 மெற். தொன்னால் அதிகரித்தல் 2022	√			$\frac{397,23}{435,910} \times 100 = 91\%$
ஒரு நாளைக்கு 32.49 கிராமினால் தனிநபர் மீன் நுகர்வை அதிகரிக்கச் செய்தல்	√			$\frac{32.49}{38.4} \times 100 = 84.6\%$

05 நிலைபேறான அபிவிருத்தியின் நோக்கம் (SDG) நிறைவேற்றிய செயலாற்றுகை

5.1 அடையாளம் காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தியின் நோக்கம்

இலக்கு / நோக்கம்	நோக்கம்	சாதனையின் குறிகாட்டி	இதுவரை வெற்றியடைந்த முன்னேற்றம்			
			0% - 49%	50%-74%	75%-100%	
நிலைபேறான அபிவிருத்தி இலக்கு 14 (உறுதியான அபிவிருத்திக்கு சமுத்திர கடல் மற்றும் சமுத்திர வளங்கள் பேணல் மற்றும் ஊட்டச்சத்து பயன்பாடு)	2022இல் சமுத்திர மீன் உற்பத்தி 423,500 மெற்றிக் தொன்னாகும்	மெற்றிக் தொன் 397,230			√	$\frac{397,230}{423,500}$ X 100 = 93.79%
	2022இல் உள்நாட்டு நீர்வாழ் உயிரின மீன் உற்பத்தி 110,000 மெற்றிக் தொன்னாகும்	மெற்றிக் தொன் 116,620			√	$\frac{116,620}{110,000}$ X 100 = 106%
	2022இல் தனிநபர் மீன் நுகர்வு நாள் ஒன்றுக்கு 38.4 கிராம் வரை அதிகரித்தல்	நாள் ஒன்றுக்கு கிராம 32.49			√	$\frac{32.49}{38.4}$ X 100 = 84.6%
நிலைபேறான அபிவிருத்தி இலக்கு 14 (ஆரோக்கியமான வாழ்க்கையை உறுதி செய்தல் மற்றும் அனைத்து வயதினரின் நலனை மேம்படுத்தல்)	மீன் ஏற்றுமதியை அதிகரிக்கச் செய்தல் 2022இல் 32.700 மெ.தொ. வரை அதிகரித்தல்.	மெற்றிக் தொன் 25,730			√	$\frac{25,730}{32,700}$ X 100 = 78.68%

5.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைந்த வெற்றி மற்றும் சாதனை

5.2.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைந்த வெற்றி

இலக்கு/ நோக்கம்	தற்போதைய முன்னேற்றம்.	பொறுப்புடைய நிறுவனம்
நிலைபேறான அபிவிருத்தியின் நோக்கம் 14 - நிலைபேறான அபிவிருத்திக்கு சமுத்திர கடல் மற்றும் சமுத்திர வளங்கள் பாதுகாத்தல் மற்றும் பொருளாதார பயன்பாடு		
14.4 2022ஆம் ஆண்டின் போது மீன்களின் உயிரியல் பண்புகளால் நிர்ணயிக்கப்பட்ட மற்றும் வரம்பற்ற நிலையான அதிகபட்ச அறுவடைக்கு குறுகிய நேரத்தில் மீன் வளத்தை மீட்டெடுக்க மீன் பிடித்தலை திறம்பட நிர்வகித்தல் மற்றும் வரம்பற்ற சட்ட விரோதமான, அறிக்கை யிடப்படாத மற்றும் கட்டுப்பாடற்ற மீன்பிடி செயற்பாட்டினை முடிவுக்கு கொண்டு வந்து அறிவியல் அடிப்படையிலான முகாமைத் திட்டங்களை செயற்படுத்தல். 14.4.1 உயிரியல் ரீதியாக நிலையான மட்டத்தில் பேணப்படும் மீன் இருப்புகளின் தொகை.	2020ஆம் ஆண்டில் இலங்கையின் வடகிழக்கு கரையோரத்தில் உள்ள சிறிய மீன்களின் உயிரியல் அடர்த்தி 2240 மெ.தொ. நடுத்தர அளவிலான மீன்களின் உயிரியல் அடர்த்தி 2271.3 0 மெ.தொ. நாரா நிறுவனத்தின் மூலம் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் சிங்கி இறால் (*Panulirus homarus)* அடர்த்தி மதிப்பீடு செய்த பெறுபேற்றுக்கு அமைய, அவற்றின் இனப் பெருக்க திறனின் சமநிலை 27% மாகும்.	
14.6 2022ஆம் ஆண்டில் தற்போதுள்ள கொள்ளளவை விட அதிகமாக மீன்பிடிப்பதற்கு காரணமான விசேட கடற்றொழில் மானியத்தை இரத்து செய்தல், சட்ட விரோதமான, அறிக்கை யிடப்படாத மற்றும் கட்டுப்பாடற்ற மீன்பிடிக்க அனுமதிக்கும் மானியங்களை நீக்குதல், வளரும் நாடுகளுக்கு மற்றும் குறைந்த வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு பொருத்தமான திறம்பட மற்றும் வேறு விதமாக நடத்தப்படுவதன் முக்கியத்துவத்தை இனம் காணல் மற்றும் உலக சந்தை அமைப்பின் மீன்பிடி மானியம் கலந்துரையாடலில் அவற்றை அத்தியாவசிய பிரிவாக மாற்றுதல். 14.6.1 நாடுகளுக்கு அமைய சட்ட விரோதமான, அறிக்கை யிடப்படாத மற்றும் கட்டுப்பாடற்ற மீன்பிடியை கட்டுப்படுத்துவதை நோக்காகக் கொண்டு சர்வதேச முன்முயற்சிகளின் செயற்பாட்டின் மட்டத்தில் முன்னேற்றல்.	இந்து சமுத்திர டூனா ஆணைக்குழுவின் ஒழுங்குவிதிகள் மற்றும் ஒப்பந்த நிபந்தனைகளைக் கடைப்பிடிக்கும் நிலை 2020இல் 86% மாக இருந்தது. அத்துடன் 2030ஆம் ஆண்டில் 100% இலக்கை அடைவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.	சட்ட விரோதமான மீன்பிடி நடவடிக்கை நிறுத்துவதற்கு கடற்றொழில் திணைக்களம், NARA மற்றும் NAQDA ஆகிய நிறுவனங்களின் மூலம் பொறுப்புடைய கடற்றொழில் கைத்தொழில் மற்றும் சர்வதேச முறையைக் கடைப்பிடிப்பதற்கான தொகுதி நடைமுறைப்படுத்தப்பட்டது.

14.7 2030ஆம் ஆண்டினபோது நிலைபேறான கடற்றொழில் வளம், நீர் சார்ந்த கலாச்சாரம் மற்றும் சுற்றுலா கைத்தொழில முகாமைத்துவம் மற்றும் உறுதியான முறையில் பயன்படுத்தி வளரும் சிறிய நாடுகளின் நாடுகளுக்கு மற்றும் குறைந்த பட்ச அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கும் பொருளாதார நன்மை கிடைக்கும். 14.7.1 அபிவிருத்தி அடையாத சிறிய தீவுகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஒரு பங்காக உறுதியான கடற்றொழழில் கைத்தொழிலாகும்.	தற்போதுள்ள பொருளாதார நிலை காரணமாக மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பங்கு கடற்றொழில் கைத்தொழிலில் 1.1% மாக உள்ளது. 2030இல் 1.2% அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.	நீரியல் வளங்களை உறுதியாக பயன்படுத்துவதற்கு கடற்றொழில் திணைக்களம் மற்றும் NARA நிறுவனத்தின் மூலம் கட்டுப்படுத்தப் படுகிறது.
14 (அ) சிறிய அளவிலான பாரம்பரிய மீனவர்களுக்கு கடல் வளங்கள் மற்றும் சந்தை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தல். 14 (ஆ) 1. நாடுகளுக்கு அமைய சிறிய அளவுடைய கடற்றொழில் கைத்தொழிலுக்கான அணுகல் உரிமைகளை அங்கீகரித்து பாதுகாக்கும் சட்டம்/ ஒழுங்குமுறை நடைமுறைகளை நிறுவன கட்டமைப்பைப் பயன்படுத்துவதில் முன்னேற்றம்.	சிறு தொழில் முறை மீனவர்களுக்கான முகாமைத்துவ திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இதில் 75% முன்னேற்றம் காணப்பட்டுள்ளது.	கடற்றொழில் திணைக்களம் மற்றும் NARA நிறுவனத்தின் மூலம் கட்டுப்படுத்தப் படுகிறது .
14 (இ) "எமக்குத் தேவையான எதிர்காலம்" (The Future We Want)" இன் 158வது பிரிவில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு, கடல் மற்றும் அவற்றின் வளங்களைப் பாதுகாப்பதற்கு மற்றும் உறுதியாகப் பயன் படுத்துவதற்கு சட்ட ரீதியான வேலைத் திட்டங்களை வழங்கும் "ஐக்கிய நாடுகளின் சமுத்திர சட்டம் சம்பந்தமாக பிரமானத்தில் குறிப்பிடப் பட்டுள்ள சட்டத்துக்கு அமைய சமுத்திர மற்றும் அவற்றின் வளங்களை பாதுகாப்பதற்கு மற்றும் உறுதியாக பயன்படுத்துவதை மேம்படுத்தல். 14.ஈ.1 சமுத்திர மற்றும் அவற்றின் வளங்களை பாதுகாப்பதற்கு மற்றும் உறுதியாக பயன்படுத்து வதற்கான சமுத்தர சட்டம் சம்பந்தமாக ஐக்கிய நாடுகளின் பிரமாணத்தின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ள கொள்கை மற்றும் நிறுவனத்தின் கட்டமைப்பு	கடற்றொழில் துறையில் இடைக்கால திட்டம் 2021-2025 தயாரிக்கப்பட்டுள்ளது. 2023-2027 தயாரிக்கப்பட்டு வருகிறது.	கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் கொள்பை வெளியீட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு இந்த முன்னேற்றத்தின் முடிவை செயற்படுத்துதல் மற்றும் அணுகல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது. இதற்கிடையில் கடற்றொழில் அமைச்சு UNCLOSEஇன் முன்னேற்றம் மற்றும் சட்ட கட்டமைப்பின் மூலம் அந்த ஒப்பந்தங்களை செயற்படுத்துவதை துாண்டுகின்றது.

சர்வதேச சட்டத்தை நடைமுறைப்படுத்தும் கடல்சார் துறையில் கொள்கைகளை எற்றுக் கொள்வதில் முன்னேற்றம் கண்ட நாடுகளின் எண்ணிக்கை		
நிலையான வளர்ச்சி இலக்கு 12 – நிலையான நுகர்வு மற்றும் உற்பத்தி முறைகளை உறுதி செய்தல்		
உணவு மற்றும் இழப்புக் குறியீடு		
12.3 2030இன்போது சில்லறை மற்றும் நுகர்வு மட்டத்தில் தனநபர் உணவுக் கழிவுகளைக் குறைத்து அறுவடைக்குப் பிந்தைய இழப்புள் உட்பட உற்பத்தி மற்றும் விநியோக சங்கிலிகளில் உள்ள கழிவுகளைக் குறைக்கவும். 12.3.1 உலக உணவு இழப்பு சுட்டி	காலப்போக்கில் விநியோக சங்கீயில் உணவு கெட்டுப் போகும் சதவீதத்தில் மாற்றங்களின் சுட்டி, உணவு இழப்புக் குறியீடு பிந்தையவற்றின் அடையாளம் காணப்பட்ட முக்கிய அளவுகோல்களின் அடிப்படையில் கணக்கிடல் வேண்டும்.	கடற்றொழில் திணைக்களம் மற்றும் NARA நிறுவனத்தின் மூலம் கட்டுப்படுத்தப் படுகிறது .

5.2.2 நிலையான அபிவிருத்தி இலக்கை அணுகுவதற்கு உள்ள சவால்கள் மற்றும் இடைவெளிகள்

1. இக்காலப் பகுதியில் ஏற்பட்டிருந்த எரிபொருள் பற்றாக்குறை, எரிபொருள் விலையேற்றம் மற்றும் ஐஸ் போன்ற உள்ளீடுகளின் விலை விலை உயர்ந்து சென்றமை காரணமாக மீனவர்களின் ஆர்வம் குறைதல்.

2. மீன் உற்பத்திகளில் விலை கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது ஏறக்குறைய இரு மடங்காக அதிகரித்துள்ளதால் மீன் நுகர்வு ஒப்பீட்டளவில் குறைவு.

3. கரையோர வளங்கள் பல அறிவியல் சான்றுகள் இன்றி மோசமாக நிர்வகிக்கப்படுகின்றது. சில சந்தர்ப்பங்களில் வளங்களைப் பயன்படுத்துபவர்களின் மோசமான கண்காணிப்பின் மூலம் வளங்கள் அதிகமாக சுரண்டப்படுகின்றன. எனவே முகாமைத்துவம் மேற்கொள்ளல் மற்றும் பயனர்களைப் பாதுகாத்தல் மற்றும் முகாமைத்துவம தொடர்பான மனப்பான்மை உருவாக வேண்டும். இதற்கு மேலதிகமாக தற்போதுள்ள சட்டத்தை அமுல்படுத்த அமுலாக்கல் அதிகாரிகளுக்கு முறையான அறிவு அல்லது வசதிகள் வழங்குது அவசியமாகும்.

4. கடல் மற்றும் சமுத்திரப் பிரிவு சம்பந்தமாக நவீன ஆய்வு முறை பற்றிய அறிவை வழங்குவதற்கு தொழில்நுட்பம் மற்றும் நிதி பற்றாக்குறையாக அமைந்துள்ளது. சாதாரணமாக மக்களுக்கிடையே சமுத்திர சூழல் தொகுதிகளின் பெறுமதி பற்றிய வெவ்வேறு நிறுவனங்களுக்கிடையில் பொறுப்புகள் ஒருவருக்கொருவர் பொறுப்பேற்க மாட்டார்கள். இலங்கையில் கடல் மற்றும் கரையோர வளங்களை நிர்வகிப்பதற்கான போதிய ஒருங்கிணைப்பு இல்லாமை பாரதூரமான பிரச்சனையாகும்.

5. சட்ட விரோத மற்றும் தீங்கு விளைவிக்கும் முறைகளால் ஏற்படும் ஆபத்து.

6. மீன் வளத்தை மீட்டெடுப்பதில் உள்ள பலவீனம்.

7. முகாமைத்துவம் மற்றும் மீன் விற்பனைக்கான சர்வதேச தேவைகளைப் பூர்த்தி உள்ள பிரச்சனை.

8. மீனவ மக்களின் மீன்பிடி நடவடிக்கைகளில் தொடர்ச்சியான நிலைறோன தன்மை பற்றி நிச்சயமற்ற தன்மை.

9. வளங்களை அதிகமாக சுரண்டல் மற்றும் அழித்தல்.

6.1. ஊழியர் புள்ளிவிபர முகாமைத்துவம்

	அனுமதிக்கப்பட்ட ஊழியர் தொகை	தற்போதுள்ள ஊழியர் தொகை	வெற்றிடம்/ (மேலதிகம்)**
சிரேஸ்ட	27	23	04
மூன்றாம் நிலை	05	04	01
இரண்டாம் நிலை	96	89	26
முதன்மை	51	36	15

6.2. நிறுவனத்தின் செயற்றினுக்கான மனித வளக் குறைவு அல்லது மேலதிக பாதிப்புக்கான விடயம்.

சேவையை மேலும் மேம்படுத்தும் வகையில் வெற்றிடங்களை நிரப்புமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

6.3 மனித வள அபிவிருத்தி

வேலைத் திட்டத்தின் பெயர்	பயிற்சி வழங்கப் பட்ட ஊழியர் கள் எண்ணி க்கை	வேலை திட்ட கால எல்லை	அனைத்து முதலீடுகள் (ரூபா '000)		வேலைத் திட்டத்தின் தன்மை (தேசிய/ வெளி நாட்டு)	கொள்ளள வு/ பெற்ற பயிற்சி
			Njrpa	ntsp ehl;L		
புதிதாக நியமிக்கப்பட்ட வர்களுக்கு பயிற்சி வழங்கும் அபிவிருத்தி அலுவலர்	34	2022.02.14 | 2022.02.19	40,500/-	-	உள்நாட்டு	பயிற்சி பாடத் துறையில் ஒட்டு மொத்த உற்பத்தி திறன் மேம்படுத் தப்பட்டுள் ளது
சிஸ்டம் / நெட்வேர்க் நிர்வாகத்தில் அவசியம்	2	2022 ஒக். 15,19,25,26 2022 நவம் 01	60,000/-	-	உள்நாட்டு	
சாரதி பயிற்சி வேலைத் திட்டம்	17	2022.10. 29,30	31,085/-	-	உள்நாட்டு	
சம்பள மாற்றம்	30	01 நாள்	24,000/-	-	உள்நாட்டு	
அரச அலுவலர்களின் விடுமுறை	18	01 நாள்	16,000/-	-	உள்நாட்டு	

07 இணக்க அறிக்கை

இல	சம்பந்தப்பட்ட மற்றும் மேற்கொள்ள வேண்டிய தேவைகள்	நிலைத் தன்மை (இணக்கமான/ இணக்க மற்ற)	இணக்க மற்றதாயின் சுருக்கமாக விளக்குக	இணக்க மற்றதாயின் எதிர்காலத் தில் இதனைத் தடுக்க பரிந்துரைக் கப்பட்ட நடைமுறை வழிகள
01	**கீழ்குறிப்பிடப்படும் நிதிக் கூற்று.். கணக்கு குறிப்பிட்ட தினத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**			
1.1	வருடாந்த நிதிக் கூற்று	அனுகூலமானது		
1.2	அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு	அனுகூலமானது		
1.3	வணிக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்கு (வணிக முற்பணக் கணக்கு)	அனுகூல மானது		
1.4	களஞ்சிய முற்பணக் கணக்கு			
1.5	விசேட முற்பணக் கணக்கு			
1.6	ஏனையவை			
02	**புத்தகங்கள் மற்றும் ஆவணங்கள் பராமரித்தல் (நி.பி. 445)**			
2.1	267/2018ம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைய நிலையான சொத்துக்கள் ஆவணங்களை முறையாக பேணிச் செல்லல்.	அனுகூலமானது		
2,2	ஆளுக்குரிய வேதன ஆவணம்/ ஆளுக்குரிய வேதன அட்டைகள் முறையாக பராமரிக்கப்பட்டுள்ளது.	அனுகூலமானது		
2,3	கணக்காய்வு ஆவணங்களை முறையாக பேணிச் செல்லல்.	அனுகூலமானது		
2.4	உள்ளக கணக்காய்வு அறிக்கை ஆவணங்களை முறையாக பேணிச் செல்லல்.	அனுகூலமானது		
2.5	சகல மாதாந்த கணக்கு சாராம்சம் (CIGAS) முறையாக குறித்த திகதியில் திறைசேறிக்கு சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.	அனுகூலமானது		
2.6	காசோலை மற்றும் பணக் கட்டளை ஆவணம் முறையாக பராமரிக்கப் பட்டுள்ளது.	அனுகூலமானது		
2.7	பொருட் பதிவேட்டு ஆவணங்களை முறையாக பேணிச் செல்லல்.	அனுகூலமானது		
2.8	மொத்த ஆவணம் முறையாக பராமரிக்கப்பட்டுள்ளது.	அனுகூலமானது		
2.9	இழப்பு நட்ட பதிவேட்டு ஆவணம் முறையாக பேணிச் செல்லல்.	அனுகூலமானது		
2.10	பொறுப்புகள் பற்றிய ஆவணம் முறையாக பராமரிக்கப்பட்டுள்ளது	அனுகூலமானது		
2.11	துணை கையேடு GAN 20 பற்றிய ஆவணம் முறையாக பராமரிக்கப்பட்டுள்ளது.	அனுகூலமானது		

03	**நிதி நிர்வாகத்துக்கான செயற்பாடுகளின் பிரதிநிதித்துவம் (நி.பி.135)**	அனுகூலமானது		
3.1	நிதி அதிகார நிறுவனத்துக்குள் அதிகாரம் வழங்கப்பட்டிருத்தல்	அனுகூலமானது		
3.2	நிதி அதிகாரங்களை மாற்றுவது குறித்து நிறுவனத்துக்கு தகவல் கொடுத்திருத்தல்	அனுகூலமானது		
3.3	சகல கொடுக்கல் வாங்கல்களும் இரு அலுவலர்கள் அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையினர் ஊடாக அனுமதிக்கப்பட்டவாறு அதிகாரம் வழங்கப்பட்டிருத்தல்.	அனுகூலமானது		
3.4	2014.05.11ஆந் திகதிய 171/2004ஆம் இலக்க அரச கணக்கு சுற்றறிக்கைக்கு அமைய, அரச ஊதிய மென்பொருள் தொகுப்பினைப் பயன்படுத்தும்போது கணக்காளர்களின் நிர்வாகத்துக்குட்பட்டு நடைமுறைப்படுத்தல்	அனுகூலமானது		
04	**வருடாந்த செயற்றிட்டம் தயாரித்தல்**	அனுகூலமானது		
4.1	வருடாந்த செயற்றிட்டம் தயாரித்தல்	அனுகூலமானது		
4.2	வருடாந்த கொள்முதல் திட்டம் தயாரித்தல்.	அனுகூலமானது		
4.3	வருடாந்த உளளக கணக்காய்வு திட்டம் தயாரித்தல்	அனுகூலமானது		
4.4	வருடாந்த மதிப்பீடு தயாரிக்கும் போது தேசிய வரவு செலவு திணைக்களத்துக்கு (டீனு) குறித்த தினத்தில் சமர்ப்பித்தல்.	அனுகூலமானது		
4.5	வருடாந்த பணப் பாய்வு அறிக்கை குறித்த தினத்துக்கு திறைசேறி செயற்பாட்டு திணைக்களத்துக்கு சமர்ப்பித்திருத்தல்.	அனுகூலமானது		
05	**கணக்காய்வு அறிக்கை**	அனுகூலமானது		
5.1	கணக்காய்வாளர் நாயகத்தினால் குறித்துரைக்கப்பட்ட திகதிக்குள் சகல கணக்காய்வு கேள்விகளுக்கும் பதிலளித்தல்.	அனுகூலமானது	சில கணக்காய்வு கேள்விகளுக்கு அமைச்சின் பல்வேறு பிரிவுகளின் மூலம் தகவல் கோரப் பட்டுள்ளது.	விடை கிடைத்த பின் உடனடியாக விடை வழங்க தீர்மானிக் கப்பட்டுள் ளது.
06	**கணக்காய்வு அறிக்கை**	அனுகூலமானது		
6.1	நி.பி. (134) (2) DMA/1-2019 க்கு அமைய வருட ஆரம்பத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்துரையாடி உள்ளக கணக்காய்வு அறிக்கை தயாரித்தல்.	அனுகூலமானது		
6.2	சகல உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாத காலத்துக்குள் பதில் வழங்குதல	அனுகூலமானது		

6.3	2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40(4) உப பந்தியின் பிரகாரம் சகல உள்ளக கணக்காய்வு அறிக்கையின் பிரதி முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்துக்கு சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.	அனுகூலமானது		
6.4	நிதி ஒழுங்குவிதி 134(3) இன் பிரகாரம் சகல உள்ளக கணக்காய்வு அறிக்கையின் பிரதி முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத் துக்கு சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.	அனுகூலமானது		
07	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு**			
7.1	DMA/1-2019 க்கு அமைய குறைந்த பட்சம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு 04க்கான வருடத்துக்குள் முன்னெடுத்தல்.	04 குழுக் களுக்குரிய விடயம் கலந்துரையாடப் பட்டுள்ளது.		
08	**ஆதன முகாமைத்துவம்**			
8.1	01/2017ஆம் இலக்க ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கையின் 07வது பிரிவுக்கு அமைய ஆதனக் கொள்முதல் மற்றும் கையாளல் போன்ற தகவல்கள் கொம்ஜரேலர் நாயகத்தின் அலுவலகத்துக்கு அறிக்கையிடல	அனுகூலமானது		
8.2	மேற்குறித்த சுற்றறிக்கையின் 13வது பந்தியின் பிரகாரம், இந்த சுற்றறிக்கையின் விதி முறைகளை செயற்படுத்தலை தொடர்புபடுத்த பொருத்தமான இணைப்பு அலுவலரை நியமித்து அந்த அலுவலர் பற்றிய தகவல் கொம்ஜரேலர் நாயகத்தின் அலுவலகத்துக்கு அறிக்கைப்படுத்தல்	அனுகூலமானது		
8.3	அரச நிதி சுற்றறிக்கை இல. 05/2016 க்கு அமைய பொருட் பதிவு கணக்கெடுப்பு குறித்த திகதியில் கணக்காய்வாளருக்கு சமர்ப்பித்தல்.	அனுகூலமானது		
8.4	வருடாந்த கணக்கெடுப்பில் அதிகப் படியானவை கண்டு பிடிப்பு, குறைபாடுகள் மற்றும் ஏனைய பரிந்துரைகளை சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலப் பகுதியில் மேற்கொள்ளல்.	அனுகூலமானது		
8.5	மாசடைந்த பொருட்களை அகற்றுதல் நி.பி. 772க்கு அமைய மேற்கொள்ளல்.	அனுகூலமானது		
09	**வாகன முகாமைத்துவம்**			
9.1	வாகனங்களுக்கு நாளாந்த செலுத்தும் குறிப்பேட்டு மாதாந்த சாரம்ச அறிக்கை தயாரிக்கும் போது குறிப்பிட்ட தினத்துக்கு கணக்காய்வு அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டும்.	அனுகூலமானது		
9.2	வாகன அறிக்கை 06 மாத காலத்துக்குள் கையாள வேண்டும்	அனுகூலமானது		
9.3	வாகன லொக் புக் முறையாகப் பேணுவதற்கு அவற்றை முறையாக முன்னெடுத்தல் வேண்டும்.	அனுகூலமானது		
9.4	ஒவ்வொரு வாகன பாதிப்பு சம்பந்தமாக நி.பி 103, 104, 109 மற்றும் 110 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல்.	அனுகூலமானது		

9.5	2016.12.29ஆந் திகதிய 2016/30 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை 3.1 அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்ட விதிமுறைகளுக்கு அமைவாக வாகனங்களின் எரிபொருள் பற்றி மீள் பரிசீலனை செய்தல	அனுகூலமானது		
9.6	செல்லுபடியாகும் காலப் பகுதிக்குள் விபத்து, குத்தகை வாகன லொக் புக்கின் உரிமையை முழுமையாக உரிமையை பேணிச் செல்லல்	அனுகூலமானது		
10	**வங்கி கணக்கு முகாமைத்துவம்**			
10.1	குறித்த திகதிக்கு வங்கி ஒப்பீடுகள் கூற்று முறையாக மேற்கொண்டு உறுதி செய்து கணக்காய்வுக்கு சமர்ப்பித்தல்.	அனுகூலமானது		
10.2	மீளாய்வு வருடத்தில் அல்லது அதற்கு முன்னரான வருடத்தி லிருந்த முன்னுக்கு கொண்டு செல்லப்பட்ட செயலற்ற வங்கி கணக்குகளை தீர்த்துக் கொள்ளல்.	அனுகூலமானது		
10.3	வங்கி ஒப்பீட்டு கூற்றின் மூலம் உள்ளடக்கல் மற்றும் ஒத்திருக்க வேண்டிய மீதி சம்பந்தமாக நிதி ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு இந்த மீதி ஒரு மாத காலத்துக்குள் நிரப்பப்படும்.	அனுகூலமானது		
11	**ஒதுக்கீட்டின் பயன்பாடு**			
11.1	வழங்கப்பட்ட ஒதுக்கீடு அவற்றின் எல்லையை மீறாத வகையில் செலவிடல்	அனுகூலமானது		
11.2	நி.பி. 94(1)இன் பிரகாரம் வழங்கப்பட்ட ஒதுக்கீட்டைப் பயன்படுத்திய பின்னர் வருட இறுதியில் மீதி ஒதுக்கீட்டு வழங்கல் வரம்பை மீறாத கடன்களின் வருகை	அனுகூலமானது		
12	**அரச ஊழியரிகளின் முற்பணக் கணக**			
12.1	வரையறைக்கு அமைவாக	அனுகூலமானது		
12.2	நிலுவையாகவுள்ள கடன் மீதி சம்பந்தமாக அட்டவணை உருவாக்கி இருத்தல் வேண்டும்.	அனுகூலமானது		
12.3	வருடத்துக்கு மேற்பட்ட காலத்திலிருந்து நிலுவையாக இருக்கும் மீதியை தீர்த்திருத்தல்	அனுகூலமற்றது	20 வருடங் களுக்கும் பழமையான கடன் நிலுவை பற்றிய ததரவைக் கண்டு பிடிப்பது கடினம். செயலாக்கம் கடினமாகிறது.	
13	**பொது வைப்பீட்டுக் கணக்கு**			
13.1	தாமதமான வைப்பீடு சம்பந்தமாக நி.பி. 571இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருத்தல்	அனுகூலமானது		
13.2	பொது வைப்பீட்டுக்கான நிர்வாக கணக்கு முறையாகப் பராமரிக்கப்பட்டிருத்தல்.	அனுகூலமானது		

14	**பணி முற்பணக் கணக்கு**			
14.1	மீளாய்வு வருட இறுதியில் நிதி ஏட்டு மீதி திறைசேரி திணைக்களத்துக்கு அனுப்பி யிருத்தல் வேண்டும்.	அனுகூலமானது		
14.2	நி.பி. 371இன் பிரகாரம் அனுமதிக்கப்பட்ட எல்லையை விஞ்சாத வகையில் பணி முற்பணம் வழங்கியிருத்தல	அனுகூலமானது		
14.3	நி.பி. 371இன் பிரகாரம் அனுமதிக்கப்பட்ட எல்லையை விஞ்சாத வகையில் உண்மையான துணை பணி முற்பணம் வழங்கியிருத்தல்.	அனுகூலமானது		
14.4	பணி முற்பண கணக்கின் மீதி, திரைசேரியின் புத்தகத்துடன் மாதாந்தம் ஒப்பீடு செய்தல்	அனுகூலமானது		
15	**வருமானக் கணக்கு**			
15.1	சம்பந்தப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக, சேகரிக்கப்பட்ட வருமானம் மீள செலுத்தப்பட்டிருத்தல்.	அனுகூலமானது		
15.2	சேகரிக்கப்பட்ட வருமானம், வைப்பீட்டுக் கணக்கில் வரவு வைக்காமல் நேரடியாக வரவு செய்தல் வேண்டும்.	அனுகூலமானது		
15.3	நி.பி 176க்கு அமைய வருமான அறிக்கை கணக்காய்வாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.	அனுகூலமானது		
16	**மனித வள முகாமைத்துவம்**			
16.1	அனுமதிக்கப்பட்ட செயற்குழு எல்லைக்குள் செயற் குழுவைப் பேணுதல்	அனுகூலமானது		
16.2	செயற்குழுவில் சகல அங்கத்த வர்களுக்கும் கடமைப் பட்டியல் வழங்கப்பட்டிருத்தல்.	அனுகூலமானது		
16.3	20.09.2017ஆந் திகதிய MSD சுற்றறிக்கை 04/2017ஆம் இலக்கத்தின் பிரகாரம் சகல அறிக்கைகளும் முகாமைத்துவ சேவை திணைக்களத்துக்கு அனுப்புதல்.	அனுகூலமானது		
17	**பொதுமக்களுக்கு தகவல் வழங்கல்**			
17.1	தகவல் அறிந்துகொள்ளும் சட்டம் மற்றும் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் தகவல் அலுவலர் ஒருவர் நியமித்து தகவல் வழங்கும் ஆவணத்தை முறையாகப் பேணல்	அனுகூலமானது		
17.2	நிறுவனம் சம்பந்தமாக அதனை இணைய தளத்தின் ஊடாகவோ அல்லது மாற்று வழி ஊடாக நிறுவனம் சம்பந்தமாக பொது மக்களின் பாராட்டுக்கள்/ குற்றச் சாட்டுக்களை வெளியிட வசதி	அனுகூலமானது		
17.3	தகவல் அறிந்துகொள்ளும் சட்டத்தின் 08வது மற்றும் 10வது பிரிவின் பிரகாரம் வருடத்துக்கு இருமுறை அல்லது வருடத்துக்கு ஒருமுறை அறிக்கை சமர்ப்பித்தல்.	அனுகூலமானது		

18	**குடியுரிமையைப் பேணுதல்**			
18.1	05.∴2008ஆம் இலக்க மற்றும் 05.∴2018(1) இலக்க பொது நிர்வாக முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைய குடியுரிமை.∴ சேவை பெறுனர் சாசனம் தயாரித்து செயற்படுத்தல்.	அனுகூலமானது		
18.2	இச் சுற்றறிக்கையில் 2.3ஆம் பந்தியின் பிரகாரம், குடியுரிமை குடியுரிமை.∴ சேவை பெறுனர் சாசனம் தயாரித்தல் மற்றும் செயற்படுத்துவதற்கான நடவடிக்கையை கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்கு நிறுவனத்தினால் வழிமுறைகள் தயாரித்திருத்தல்.	அனுகூலமானது		
19	**மனித வளத் திட்டம் தயாரித்திருத்தல்**			
19.1	2018.01.24 ஆந் திகதிய 02/2018ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை இணைப்பு 02 மாதிரி அடிப்படையில் மனித வளத் திட்டம் தயாரித்திருத்தல்.	அனுகூலமற்றது	மனித வளத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது.	மனித வளத் திட்டம் நிறைவு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.
19.2	செயற்குழுவின் சகல அங்கத்தவர்கள் அடிப்படையில் வருடாந்தம் குறைந்த பட்சம் 12 மணி நேரத்துக்குக் குறையாத பயிற்சிக்கான சந்தர்ப்பம் மேற்குறிப்பிட்ட மனித வள திட்டத்துக்குள் உறுதி செய்திருத்தல்.	அனுகூலமானது		
19.3	மேற்குறிப்பிடப்பட்டுள்ள சுற்றறிக்கை இணைப்பு 01இல் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிக்கு அடிப்படையில் அனைத்து செயற் குழுவினருக்கும் வருடாந்தம் ஒப்பந்தம் கைச்சாத்திட்டிருத்தல்.	அனுகூலமானது		
19.4	சுற்றறிக்கையில் 6.5ஆம் பந்தியின் பிரகாரம், மனித வள அபிவிருத்தி திட்டம் முறையாக மேற்கொள்ளல். திறன் விருத்தி வேலைத் திட்டம் அபிவிருத்தி செய்தல், நிபுணத்துவ வேலைத் திட்டம் நடைமுறைப் படுத்துவது சம்பந்தமாக பொறுப்பு வாய்ந்த சிரேஸ்ட அதிகாரி நியமித்து இருத்தல்.	அனுகூலமானது		
20	**கணக்காய்வு கேள்விகளுக்கு விடையளித்தல்**			
20.1	முன்னைய ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் நாயகத்தினால் சுட்டிக் காட்டிய குறைபாடுகளை சரி செய்தல்	அனுகூலமானது		